வெட்டாற்றின் குறுக்கே பாலம்

*** 703. வினு— திரு வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொரடாச்சேரி அருகில் உள்ள வேடம்பூர் கிராமத்தையும், அரவங்குடி கிராமத்தையும் இணைக்கும் வகையில் வெட்டாற்றில் ஒரு புதிய பாலம் கட்ட தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம், எனில், இதற்கான மதிப்பீட்டு பட்டியல் தொகை எவ்வளவு ?

(உ) இத்திட்டம் எப்போது செயல்படத் துவங்கும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) 7·50 இலட்சங்கள்.

(உ) பாலம் கட்டும் வேலை தற்போது ஆரம்பமாகிவிட்டது.

திரு வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டுவதால், கொரடாச்சேரி, குடவாசல் வலங்கிமான் போன்ற இடங்கள் பயன் அடையும். ரயில்வே ஸ்டேஷனுக்கு சரக்குகளைக் கொண்டு போக சுலபமாக இருக்கும். ஆகவே, வேலையைத் துரிதமாக முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அப்படிப்பட்ட நன்மைகள் கிடைக்கும் என்பதால்தான் பாலம் கட்டும் வேலை நடக்கிறது.

திரு. எம்.சுரேந்திரன் : சார், அதே போன்று பாலங்கள் கட்டி முடிந்ததற்குப் பின்னுல், இதற்காகும் செலவுகளை அதிலே போக்குவரத்துக்களிடமிருந்து வசூலிக்கப் படுகிறதனுல்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ, அடுத்த கேள்வி.

பாம்பாற்றின் குறுக்கே பாலங்கள்.

*** 704 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள, அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் 1967–68, 1968–69-ல் பாம்பாற்றின் குறுக்கே பாலங்கள் கட்ட வேண்டிய இன்றியமையாமை குறித்து அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளதா?

இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Bus stand at Panruti

*** 705 *Q.*—Thiru S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the action taken by Government to complete the construction of the bus stand at Panruti ?**

1970 எப்ரல் 6]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பேருந்து நிலையம் ஏற்படுத்துவது ஊராட்சியின் பொறுப்பாகும். பண்ருட்டியில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. பேருந்து நிலையம் பொது உபயோகத்திற்காக 28–11–1969-ல் திறக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பண்ருட்டி பஸ் நிலையம் பற்றி துணைக் கேள்வி கேட்பார் திரு வரதராஜன்.

திரு. என். வரதராஜன் : பண்ருட்டி பஸ் நிலையம் கட்டி ஒன்பது மாதங்களுக்குப் பிறகு திறப்பு விழா நடந்தது. தாமதத்திற்குக் காரணம், ஆணையாளருக்கும், நகரசபை உறுப்பினருக்கும் இடையில் தகராறு என்றும், மாற்ற வேண்டும் என்றும், கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்ததா ? அதன் மேல் நடவடிக்கை எடுத்து, விரைவாக முடிவு செய்ய இயலுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, பேருந்து நிலையத் தலைமைக் கட்டடம் 1968 ஆகஸ்டு திங்களில் முடிநதது ; மேலும் சிலபல வசதிகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்தோடு, அதற்காக வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. பணிகள் முற்றும் பெற்று, தயாராக இருந்தது. அதைத் திறந்து வைக்கவேண்டும் என்று ஜூலை திங்களில் சிறப்பு விழா நடத்த நகரமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. 1969-ம் ஆண்டு, நவம்பர் திங்களில், 28-ம் நாளில் பொதுமக்கள் உபயோகத்திற்கு, கல்வி—சுகாதார அமைச்சர் அவர்களால் அது திறந்து வைக்கப்பட்டது. குற்றச்சாட்டு வந்ததாகத் தகவல் இல்லை.

மதுராந்தகத்தில் பேருந்து நிலையம்

*706 .வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் ஊராட்சி மன்ற பஸ் நிலையம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : பேருந்து நிலையம் கட்டுவதற்காக மதுராந்தகம் பேரூராட்சிக்கு மாநில நிதியிலிருந்து கடந்த ஆண்டில் ரூ. 50,000 கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: பேருந்து நிலையத்திற்கு மொத்தமாக சாங்ஷன் செய்யப்பட்ட தொகை எவ்வளவு ? அரசாங்கம் மானியமாகக் கொடுத்தது எவ்வளவு ? கடனாகக் கொடுத்தது எவ்வளவு ? பேரூராட்சி மன்றம் கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: திட்டமிட்டுள்ளபடி அதன் மதிப்பீடு ரூ. 1,50,000. இதனைச் சரிக்கட்ட, ரூ. 75,000 மானியமாகவும், ரூ. 75,000 கடனாகவும் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. மானியமாகக் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் கொடுப்பதற்கில்லை. ஆகவே, கடனாகக் கொடுக்கும் நிலையில் ரூ. 50,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஒரு லட்சத்திற்குக் குறைத்துக் கொள்ளுமாறு பேரூராட்சிக்கு அதைப் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

Employees of Public works Department deputed to Electricity Board.

*** 707 *Q.*—THIRU N.S.V. CHITHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state the action taken by the Government to recall the Government employees who have been deputed to the State Electricity Board on foreign service terms from Public Works Department ?**